# திரைப்படங்கள் சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்!



என்னுடைய கலையுலக வாழ்க்கை 1945-46ஆம் ஆண்டுகளில் தொடங்கியது. பொதுவாக என் வாழ்க்கையில் கலை, இலக்கியத்திற்காக ஒரு பகுதியைத் தந்திருக்கின்றேன். இன்னொரு பகுதியை அரசியலுக்காக, சமுதாயத்திற்காகத் தந்திருக்கின்றேன். என்னை உங்களுக்காகத் தந்திருக்கிறேன்.

1996ஆம் ஆண்டு கலையுலகப் பொன்விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் நான் 45-46ஆம் ஆண்டுகளை எண்ணிப் பார்க்கிறேன். நான் திரைப் படங்களுக்கு எழுதத் தொடங்குவதற்கு முன்பே நாடகங்களுக்கு உரையாடல் எழுதியிருக்கிறேன். ஏடுகளில் எழுதியிருக்கிறேன். சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். 1942இல் எழுதத் தொடங்கினேன். 1944-45க்குப் பிறகுதான் நாடகம் எழுத வேண்டும் திரைப்படங்களுக்குக் கதை எழுத வேண்டும் உரையாடல் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஒன்றை உங்களிடம் ஒளிக்காமல் சொல்ல விரும்புகிறேன். திருவாரூரில் நான் என்னுடைய பொது வாழ்க்கையை, அரசியல் வாழ்க்கையை, சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளை மேற்கொண்டிருந்தபோது, குண்டலகேசி இலக்கியத்தை ஒரு வானொலி நாடகமாக ஆக்கி, அதனை திருச்சி வானொலி நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒரு வாரத்திற்குப் பிறகு திருச்சி வானொலி நிலையம் நான் எழுதி அனுப்பிய குண்டலகேசி. நாடகத்தை எனக்கு திருப்பியனுப்பி, இதனை நாங்கள் ஒளிபரப்ப இயலாது என்று எழுதியிருந்தார்கள். அந்தக் குண்டலகேசிதான் மந்திரிகுமாரி திரைப்படமாக பின்னர் வெளிவந்தது.

படம் பாடமாக உருவாக, சமுதாயத்தைத் திருத்த, புதிய எழுச்சியை உருவாக்க சமுதாயத்திலே மறுமலர்ச்சியை ஏற்படுத்த நாம் தயாரிக்கின்ற படங்கள் அமைய வேண்டும்.

**முத்தமிழறிஞர் கலைஞர்**

## "மனோகரா" - திரைப்படத்தில்!



**பொ**ன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே முத்தே தமிழ்ப் பண்ணே என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே, வீரனே, என் விழி நிறைந்தவனே, தீரர்வழி வந்தவனே, என்று யாரைச் சீராட்டிப் பாராட்டினீர்களோ, அவனை, அந்த மனோகரனை, சங்கிலியால் பிணைத்து, சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டும் என்னும் உங்களது தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையா?

**- கலைஞர்**

## தமிழ்த்திரை உலகை

# காத்து வந்த காவலன் நமது கலைஞர்!

என் இனிய தமிழ்ச்சொந்தங்களே, தமிழ் மொழி வளர்த்த பெருமக்கள் பெயரிலே ஒரு பெயர் விடுபட்டு இருப்பதை சுட்டிக் காட்டுவதே கலை உலகைச் சார்ந்த எனது இந்தக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.



அக்ரகாரத்து அதிகாரம் தமிழனை குலக்கல்வி, யாகம், மந்திரம், மாயம், மதம் எனப் பல கோணங்களிலே அடிமைப்படுத்தி வைத்திருந்தது நமது வரலாறு!

செங்கோல் ஏந்தி வாழ்ந்த நமது தமிழ்இனம், தர்ப்பைப்புல்லுக்கு தலை வணங்கி அடிமைகளானதும் நமது பழைய கதைதான்!

இறுதியாக ஆரியக் கூட்டம், நமது திரை உலகையும் விட்டு வைக்கவில்லை, ஆரம்பகாலப் படங்களைப் பார்த்தால் அதில் அய்யராத்து தமிழைத்தான் கதா பாத்திரங்கள் பேசிக்கொண்டிருந்தன!

ஆத்துக்கு வரேளா மாமா, பிராணநாதா சாப்பிடறேளா, அவர் சொல்லிட்டா நீங்கள் கேட்பேளா, சூத்திரா நம்ம பாத்திரத்தை பயன்படுத்தலாமோ?

இப்படியயெல்லாம் பேசுவார்கள்.

சுருக்கமாகச் சொல்லால், திரையில் வள்ளுவன் தமிழ் அழிக்கப்பட்டு, வந்தேறிகளின் தமிழ் கோலோச்சிய காலம் அது!

இந்தக் காலக்கட்டத்தில்தான், ஒரு இளம் வயது வாலிபன் கலை உலகிலே நுழைகிறார்.

ஆரம்பக் காலங்களில் அவன் எழுத்துகள் பல ஜாம்பவான்களால் களவாடப்பட்டன. இவர் எழுதியவை எல்லாம் வேறு ஒருவர் பெயரிலே வெளிவந்தன. சூரியனை சூது மதியினரால் எத்தனை காலம்தான் மறைக்க முடியும். இருள் மேகங்கள் விலகின. தமிழனையின் தவப்புதல்வன் திரைமொழி தன் வெற்றிப் பயணத்தைத் தொடங்கியது.

இருபது முப்பது பாடல்களோடு வெளி வந்த தமிழ்த் திரைப் படங்களிலே நல்ல சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கிய வசனங்களோடு வெளிவர ஆரம்பித்தன.

அவை கை தட்டலை மட்டும் பெறவில்லை. வீதிகளிலே சாமானியர்களாலும் பேசப்பட்டன.

பாமரர்களும் அதனைக் கேட்டு பரவசப்பட்டான். பகுத்தறிவு வளரப் பெற்றான்.

குறிப்பாக இளைஞர்களும், மாணவர்களும் அந்தத் திரை மொழிக்கு அடிமையானார்கள்.

அதை எழுதியவரை தங்கள் ஆசானாக, தலைவனாக ஏற்று மகிழ்ந்தார்கள். நானும் அந்தத் திரை மொழியை கற்றுக் கொள்ளவும் அதைப்போல் எழுதிப் பழகவும் ஆரம்பித்தேன். அப்படி ஒரு புதுமையான வீரமும், பகுத்தறிவும் நிறைந்த நல்ல தமிழை திரை மொழியாக நமக்கு உருவாக்கித் தந்தவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கடந்த நூற்றாண்டில் திரை மொழி மூலம் தமிழை வளர்த்தவர்களில் கலைஞர் அவர்களின் பணி மிகமிக முக்கியமானது என்பது என் கருத்து. அவரின் பராசக்தி மனோகரா, தாயில்லாப் பிள்ளை, பூம்புகார், ரங்கூன் ராதா, மலைக்கள்ளன் போன்ற பல படங்கள், மக்களுக்கு பாடங்களாயின. பல்கலைக் கழகங்களுக்கு போக முடியாத பாமரனும் இந்த பட வசனங்களைக் கற்று பண்டிதனானதை நாம் கண்டு மகிழ்ந்த காட்சியாகும்.

அத்தகைய பெருமகனாரோடு நெருங்கி பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவன் நான். அவரை தொட்டு மகிழும் ஆசை கிடைக்கப் பெற்றவன் நான். கலைத்துறைக்கு வந்த என் எதிர்காலம் என்ன ஆகுமோ? என்று கலங்கிப் போய் இருந்த என் தாய் தந்தையர் மனதிலே மகிழ்ச்சியை விதைத்தவர் என் துரோணர் கலைஞர்.



**திரைப்பட இயக்குநர்**
**வி.சி.குகநாதன்**

யாழ்ப்பாணம் விலிங்டன் தியேட்டரில் 'பெத்தமனம் பித்து' என்ற திரைப்படம் வெளியாகியிருந்தது. அதனை பார்ப்பதற்காக என் பெற்றோரும் குடும்பத்தினரும் போகத் தயாரானார்கள். நான் என் பெற்றோரைப் பார்த்து அப்போது பல வருடங்கள் ஆகியிருந்தன. ஆகவே தியேட்டருக்கு போனதும் அங்கே உன் பிள்ளையின் போட்டோக்கள் இருக்கலாம், அதையெல்லாம் பார்த்து விட்டு அழுத படி நின்று விடாதே என்று என் தந்தையார் என் தாயிடம் சொல்லிச் சொல்லித்தான் தியேட்டருக்கு அழைத்துப் போய் இருக்கிறார்.

ஆனால், அங்கே படத்தின் போட்டோக்கள் வைத்து இருந்த கண்ணாடி பீரோவுக்குள் நான் கலைஞர் அவர்களிடம் என் படத்தின் 'பெத்தமனம் பித்து' படத்தின் நூறாவது நாள் விழாவின் போது சென்னை இராஜேஸ்வரி கல்யாணமண்டபத்தில் கேடயம் வாங்குகின்ற ஒரு படமும் வைத்து இருந்திருக்கிறார்கள். அதனைப் பார்த்து விட்ட என் தாயார் சில நிமிடங்கள் அதையே பார்த்த வண்ணம் கண் கலங்கி நின்று இருக்கிறார்.

ஏன் என்றால் என்னை அவர்கள் நேரில் பார்த்து பத்து பதினைந்து வருடங்களுக்கு மேலாகி விட்டன. என்னுடைய தோற்றத்தில் இருந்த மாற்றமும், நான் கலைஞரிடம் விருது வாங்குவதையும் பார்த்து என் தாயார் மனதை கலக்கி இருக்கிறது.

என் தந்தையார், என் தாயார் அருகில் வந்து மெதுவாக என் தாயாரை உள்ளே கூட்டிக் கொண்டு போய்விட்டார். படம் பார்த்துவிட்டு திரும்பும்போது என் தாயார் என் தந்தையிடம் சொல்லி இருக்கிறார், பார்த்தீர்களா என் பிள்ளை கெட்டுப் போகவில்லை தலைவர் கலைஞர் கையால் கேடயம் வாங்குவது என்ன சாதாரண காரியமா? அவன் வெற்றி அடைந்துவிட்டான் என்று பெருமையோடு இறுமாப்போடு சொல்லிஇருக்கிறார்.

பல வருடங்கள் பின்னால் இலங்கையிலே கலவரம் ஆரம்பித்தது, அதன் காரணமாக என் குடும்பம் எங்கள் தாயகத்துக்குத் திரும்பியது. அதன் பின்னால் மைக்கேல் ராஜ் என்ற படத்தின் நூறாவது நாள் விழா இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

அதற்கு என் தாயாரையும் நான் அழைத்துப் போய் இருந்தேன். அங்கேயும் விருது வழங்க வந்த தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் படத்தில் நான் எழுதி இருந்த பல வசனங்களைச் சுட்டிக்காட்டி என்னை பாராட்டிப் பேசினார்.

பல இடங்களிலே அவர் 'தம்பி குகநாதன், தம்பி குகநாதன்' என்று விளித்துப் பேசினார். இதனை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த என் தாயாரின் கண்களிலே மகிழ்ச்சிக் கண்ணீர், இதைப்போல கலைஞர் என்னைப் பற்றி பேசிய பல பேச்சுகளை எல்லாம் கேட்ட என் தந்தையாரும் பல தடவை மகிழ்ந்து இருக்கிறார். அவருடைய மகிழ்ச்சிக்கு அளவில்லாத அளவு அவர் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்.

ஆக, என் பெற்றோரை மகிழ்வித்த பெருமை மிக்க தலைவர் கலைஞர் அவர்கள் தான், அதனால் அவருக்கு நான் நன்றி கடமைப்பட்டவனானேன்.

அதே போல் அவர் பதவியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி நான் எந்த விழாவிற்கு அழைத்தாலும் அவர் வர மறுத்ததே இல்லை.

அகில இந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளராக நான் இருந்த போது அகில இந்திய கலைஞர்களையும் அழைத்து வந்து சென்னையிலே ஒரு பெரும் விழா எடுத்தேன். அதற்கு தலைமையேற்று இருந்தார் அன்றைய முதல்வர் கலைஞர், என்னை பெருமைப்படுத்தி பேசினார்.

எங்கள் திரைப்படத் தொழிலாளர்களுக்கும் திரைத் துறைக்கும் 100 ஏக்கர் நிலம் நான் கேட்டதும் வழங்கினார். அவர் கலை உலகிற்கு செய்திருக்கின்ற நற்காரியங்களை எல்லாம் பட்டியல் போட்டால் பல பக்கங்கள் கொண்ட ஒரு பெரிய நூலாக எழுதி விட முடியும்.

காலம் தவறாது பெய்கின்ற வான் மழை போல, தமிழ்த் திரை உலகை காத்து வந்த காவலன் நமது கலைஞர் அவர்கள். அவரது புகழை ஈடு இணையற்ற செயல்களை கலை உலகம் என்றுமே மறக்காது மறக்கவும் முடியாது!

## "ராஜகுமாரி" - திரைப்படத்தில்!



**ஆ**ண்டவனுக்கு அறிவே இல்லை. பகலைப் படைத்ததே பைத்தியக்காரத் தனம்.

நன்றி கெட்ட நரிக்குட்டி .

நீச்சல் தெரியாத மீன்குட்டி.

சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; ஆனால் பலரைப் பலகாலம் ஏமாற்ற முடியாதம்மா!

**- கலைஞர்**